# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## விண்ணப்பதாரர்களால் அதிகம் கேட்கப்படும் கேள்விகள்

## பொருளடக்கம்


| வ.எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| பிரிவு – I | இடஒதுக்கீடு மற்றும் சலுகைகள் (Reservation and Concessions) | 5-8 |
| பிரிவு – II | ஒருமுறைப்பதிவு (One Time Registration) | 8-13 |
| பிரிவு – III | இணையவழி விண்ணப்பம் (Online Application) | 13-18 |
| பிரிவு – IV | சான்றிதழ்கள் (Certificates) | |
| A. | பொதுக் கேள்விகள் (General Questions) | 19-20 |
| B | தேர்வரின் பெயர் (Candidate's Name) | 20-21 |
| C | தந்தையின்/தாயின் பெயர் (Father's/Mother's Name) | 21 |
| D | திருநங்கை (Transgender) | 22-24 |
| E | பிறந்த தேதி (Date of Birth) | 24-25 |
| F | மதம் (Religion) | 25-26 |
| G | சாதி அடிப்படையிலான இடஒதுக்கீடு (Communal Reservation) | 26-28 |
| H | மாற்றுத் திறனாளிகள் (Differently Abled Persons) | 28-30 |

| | | |
|---|---|---|
| I | ஆதரவற்ற விதவை (Destitute Widow) | 31-33 |

| வ.எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| J | முன்னாள் இராணுவத்தினர் (Ex-Servicemen) | 33-35 |
| K | வேலைவாய்ப்பு (Employment) | 35 |
| L | தமிழ் பயிற்று மொழியில் கல்வி பயின்றோர் (Persons Studied in Tamil Medium) | 36-41 |
| M | குற்றவியல் வழக்குகள் / ஒழுங்கு நடவடிக்கைகள் **(Criminal Cases / Disciplinary Cases)** | 41-43 |
| பிரிவு V | தேர்வாணையத்துடனான தகவல் தொடர்பு முறை (Communication with the Commission) | 43-44 |

## பிரிவு –I :இடஒதுக்கீடு மற்றும் சலுகைகள்
## (Reservation and Concessions)

1. தேர்வாணையம் நடத்தும் தெரிவுகளில் எவ்வித இடஒதுக்கீடுகள் வழங்கப்படுகின்றன?

**தேர்வாணையம் நடத்தும் தெரிவுகளில் கீழ்க்கண்டவாறு இட ஒதுக்கீடுகள் வழங்கப்படுகின்றன:**

- **சாதி அடிப்படையில் இட ஒதுக்கீடு**
- **பெண்களுக்கான இட ஒதுக்கீடு**
- **ஆதரவற்ற விதவைகளுக்கான இட ஒதுக்கீடு**
- **மாற்றுத்திறனாளிகளுக்கான இட ஒதுக்கீடு**
- **முன்னாள் இராணுவத்தினருக்கான இட ஒதுக்கீடு**
- **தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றோருக்கான இட ஒதுக்கீடு**

2. தேர்வாணையம் நடத்தும் தெரிவுகளில் சாதி அடிப்படையில்வழங்கப்படும் இடஒதுக்கீட்டின் சதவீதம் என்ன?

**தேர்வாணையம் நடத்தும் தெரிவுகளில் சாதி அடிப்படையில் வழங்கப்படும் இடஒதுக்கீட்டின் சதவீதம் கீழ்க்கண்டவாறு:**

- **பட்டியல் பழங்குடியினர்- 1%**
- **ஆதிதிராவிடர்-15%**
- **ஆதிதிராவிட அருந்ததியர்-3%**
- **பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம் அல்லாதோர்)-26.5%**
- **பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முஸ்லீம்- 3.5%**
- **மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர்-20%**

3. தேர்வாணையம் நடத்தும் தெரிவுகளில்சிறப்புப் பிரிவின்கீழ் வழங்கப்படும் இடஒதுக்கீட்டின் சதவீதம் என்ன?

**தேர்வாணையம் நடத்தும் தெரிவுகளில் சிறப்புப் பிரிவின்கீழ் வழங்கப்படும் இடஒதுக்கீட்டின் சதவீதம் கீழ்க்கண்டவாறு:**

- **பெண்களுக்கான இட ஒதுக்கீடு -30% (நடப்பில் உள்ளவாறு)**
- **ஆதரவற்ற விதவைகளுக்கான இட ஒதுக்கீடு-10% (பெண்களுக்கான 30 சதவீதத்தில் 10 சதவீதம்- குறிப்பிட்ட பதவிகளில்)**
- **மாற்றுத்திறனாளிகளுக்கான இட ஒதுக்கீடு -4%**
- **முன்னாள் இராணுவத்தினருக்கான இட ஒதுக்கீடு -5% (Group-C பதவிகளில் மட்டும்)**
- **தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றோருக்கான இட ஒதுக்கீடு-20% (முன்னுரிமை அடிப்படையில்)**

4. பெண்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகள் ஏதேனும் உள்ளனவா?

**பெண்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகள் - உதவி இயக்குநர் சமூக நலத்துறை மற்றும் குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் ஆகியன(Assistant Director in Social Welfare Department, Child Development Project Officer,etc.).**

5. தேர்வுக் கட்டணச் சலுகை யாருக்கு வழங்கப்படுகிறது. எத்தனை முறை இச்சலுகையினை பயன்படுத்தலாம்?

| | |
|---|---|
| ஆதிதிராவிடர் / ஆதிதிராவிட அருந்ததியர் | கட்டணம் செலுத்தத் தேவையில்லை |
| பழங்குடியினர் | கட்டணம் செலுத்தத் தேவையில்லை |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர் | மூன்று முறை மட்டும் கட்டணம் செலுத்தத் தேவையில்லை |
| இசுலாமியரல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர் | மூன்று முறை மட்டும் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. |
| முன்னாள் இராணுவத்தினர் | இரண்டு முறை மட்டும் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. |
| நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள் | கட்டணம் செலுத்தத் தேவையில்லை |
| ஆதரவற்ற விதவை | கட்டணம் செலுத்தத் தேவையில்லை |

6. வயது வரம்பு சலுகை யாருக்கு வழங்கப்படுகிறது?

**ஆதிதிராவிடர், ஆதிதிராவிட (அருந்ததியர்), பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்டஇசுலாமிய வகுப்பினர்,மற்றும்அனைத்து இனத்தைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகள், முன்னாள் இராணுவத்தினர், தேசிய மாணவர் படையில் சார்நிலை அலுவலர்கள் மற்றும் இதர பதவிகளில் உள்ள அலுவலர்கள், நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள், பிணைத்தொழிலாளிகள் மற்றும் சில இனங்களில் தற்காலிகப் பணியாளர்களுக்கும் வயது வரம்பு சலுகை வழங்கப்படுகிறது.**

**அறிவிக்கை வெளியிடப்படும் போது வயது வரம்பு சலுகை அதில் குறிப்பிடப்படும்.மேலும் தகவலுக்கு விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள் பத்தி ‘5’-ஐ பார்த்தும் அறிந்து கொள்ளலாம்.**

7. தேர்வாணையத்தின் தேர்வுகள் குறித்து எனக்கு ஐயம் (சந்தேகம்) ஏற்பட்டால் என்ன செய்வது?

**தெளிவுரை வேண்டுவோர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தினை நேரில் அல்லது 1800 419 0958 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணின் மூலம், அனைத்து வேலை நாட்களிலும் முற்பகல் 10.00 மணிமுதல் பிற்பகல் 5.45மணி வரை தொடர்பு கொள்ளலாம்.**

**ஒருமுறைப்பதிவு (One Time Registration) மற்றும் இணையவழிவிண்ணப்பம்(Online Application) குறித்த சந்தேகங்களை *helpdesk@tnpscexams.in*என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பலாம்.**

**இதர சந்தேகங்களை *contacttnpsc@gmail.com*என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.**

## பிரிவு – II :ஒருமுறைப்பதிவு (One Time Registration)

1. நிரந்தரப்பதிவு / ஒருமுறை பதிவு என்றால் என்ன?

**ஒருமுறை பதிவு என்பது விண்ணப்பதாரரின் விவரங்களைப் பெற்று அவர்களுக்கென தனித்தனியே தன்விவரப்பக்கம் ஒன்றினை உருவாக்க மட்டுமே பயன்படும். எந்த ஒரு பதவிக்கும் விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர், தேர்வாணைய இணையதளத்தில் அறிவிக்கப்பட்டுள்ள அப்பதவிக்குரிய அறிவிக்கையில் ‘APPLY’ என்ற உள்ளீடு (Input) வழியே ஒருமுறை பதிவுக்குரிய பயனாளர் குறியீடு (User ID) மற்றும் கடவுச்சொல்**

**(Password) ஆகியவற்றை உள்ளீடு (Input) செய்து விண்ணப்பிக்க வேண்டும். ஒருமுறைபதிவு என்பது எந்தவொரு பதவிக்கான விண்ணப்பம் அல்ல.**

2. ஆதார் இல்லாத விண்ணப்பதாரர்கள் என்ன செய்வது?

**ஒருமுறை நிரந்தர பதிவை மேற்கொள்ள மற்றும் நேரடிப் போட்டித் தேர்விற்கு விண்ணப்பிக்க ஆதார் கட்டாயமாகும்.எனவே, ஆதார் இல்லாதவிண்ணப்பதாரர்கள் தேர்விற்கு விண்ணப்பிக்கும் முன்னர், உரிய நடைமுறைகளை பின்பற்றி, ஆதார் எண்ணை பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

3. ஒருமுறை பதிவிற்கு ஆதார் கட்டாயமாக பதிவு செய்ய வேண்டுமா?

**விண்ணப்பதாரர் தங்களுடைய ஒரு முறைப் பதிவுடன் ஆதார் எண்ணை இணைப்பது கட்டாயமாகும். பயோமெட்ரிக் உள்ளிட்ட ஆதார் எண்ணுடன் தொடர்புடைய தகவல்கள், விண்ணப்பதாரரை அடையாளம் காணும் நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்படும். தேர்வாணையம் அத்தகவல்களை சேமிக்கவோ, யாருடனும் பகிரவோ செய்யாது. விண்ணப்பதாரர் ஒருமுறைப்பதிவில்தங்களது ஆதார் எண்ணினை இணைப்பதற்கான ஒப்புதலைஅளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.விண்ணப்பதாரரின்உண்மைத் தன்மையினை உறுதி செய்வதற்காக மட்டும் Central Identities Data Repository-க்கு ஆதார் தொடர்புடையவிவரங்களை தேர்வாணையம் பகிர்ந்து கொள்ளும்.வருங்காலத்தில்விண்ணப்பிக்க இருக்கும் விண்ணப்பதாரர் அனைவரும் புதிதாக ஒருமுறைப் பதிவு எண்ணை உருவாக்குவதற்கும் / புதுப்பிப்பதற்கும் / ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள ஒருமுறைப் பதிவில் உள் நுழைவதற்கும், எந்த ஒரு தேர்வு அறிவிக்கைக்காக விண்ணப்பிப்பதற்கும் ஆதார் எண்ணினை இணைப்பது கட்டாயமானதாகும்.**

4. விண்ணப்பத்தினைவிண்ணப்பப் படிவத்தில் பூர்த்தி செய்து அளிக்கலாமா? அல்லது இணையவழியில்(Online)மட்டுமே அளிக்க வேண்டுமா?

**தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுகளுக்கு இணையவழியில் (Online) மட்டுமே விண்ணப்பிக்க இயலும்.இதைத்தவிர அஞ்சல் வழியேவிண்ணப்பப்படிவங்கள் ஏதும் பூர்த்தி செய்து அனுப்பப்பட்டாலும் தேர்வாணையம் அதனை ஏற்றுக்கொள்ளாது.**

5. ஒருமுறைப்பதிவு என்பது எத்தனை ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும்?

**ஒருமுறைப்பதிவு என்பது பதிவு செய்த நாள் முதல் ஐந்து ஆண்டுகள் வரை செல்லுபடியாகும். ஐந்து ஆண்டுகள் முடிந்த பின்னர், விண்ணப்பதாரர், ஒருமுறைப்பதிவினை (One Time Registration), அதற்காக நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தினைச் செலுத்தி கட்டாயம் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.**

6. ஒருமுறைப்பதிவு செய்தப்பின் தேர்வாணைய அறிவிக்கையில் குறிப்பிடப்பட்ட பணிகளுக்கு மீண்டும் இணையவழி மூலமாக விண்ணப்பிக்க வேண்டுமா?

**ஒருமுறைப்பதிவு என்பது விண்ணப்பதாரரின் அடிப்படையான புள்ளிவிவரங்களைப் பதிவேற்றம் செய்வது மட்டுமே.எனவே, தேர்வுக்கான விண்ணப்பத்திலிருந்து மாறுபட்டதாகும். விண்ணப்பதாரர் தேர்வு எழுத விரும்பும் ஒவ்வொரு தேர்விற்கும், தனித்தனியே இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.(எடுத்துக்காட்டு: தொகுதி II-க்கான விண்ணப்பிப்பது தனி, அதுபோல் தொகுதி-IV க்கு தனியாக விண்ணப்பிக்க வேண்டும்).**

7. ஒருமுறைப்பதிவின் போது வேறு ஏதேனும் ஆவணங்களை பதிவேற்றம் செய்ய வேண்டுமா?

**ஒருமுறைப்பதிவின் போது ஆவணங்களை பதிவேற்றம் செய்ய வேண்டாம்.தேர்வாணையம் ஆவணங்களை பதிவேற்றம் செய்யக்கோரும் நிலையில் மட்டுமே பதிவேற்றம் செய்தல் போதுமானது.**

8. ஒருமுறைப்பதிவின் போது பயன்படுத்திய பயனாளர் குறியீடு(User ID) மற்றும் கடவுச்சொல்லினை (Password) விண்ணப்பிக்கும்போது மீண்டும் பயன்படுத்த வேண்டுமா?

**ஒருமுறைப்பதிவின் போது பயன்படுத்திய பயனாளர் குறியீடு (User ID) மற்றும் கடவுச்சொல்லினை (Password) விண்ணப்பிக்கும்போது (தேவையின் பொருட்டு) மீண்டும் பயன்படுத்த வேண்டும்.**

9. ஒருமுறைப்பதிவில் மாற்றங்கள் செய்ய இயலுமா?

**ஒருமுறைப் பதிவில் உரிய சான்றுகளின் அடிப்படையில்மாற்றங்கள் செய்து கொள்ளலாம்.**

10. பயனாளர் குறியீடு (User ID)மற்றும் கடவுச்சொல்லினை (Password)மறந்து விட்டால் என்ன செய்ய வேண்டும்?

**தேர்வாணைய இணையதளத்தின் முகப்பு பக்கத்தில் வழங்கப்பட்டுள்ள "உபயோகிப்பாளர் குறியீடு அறிய (FORGOT USER ID) / கடவுச்சொல் அறிய (FORGOT PASSWORD)" என்ற Link-கைப் பயன்படுத்தி, அதில் கோரப்படும் தகவல்களை அளித்து, உபயோகிப்பாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை தெரிந்துக் கொள்ளலாம்.**

11. ஒருமுறைப்பதிவில் அளித்த தகவல்களை மீண்டும் இணைய வழி விண்ணப்பத்தில் நிரப்ப வேண்டுமா?

**இணையவழி விண்ணப்பத்தில் விண்ணப்பிக்கும் போது ஒரு முறைப் பதிவில் அளித்த தகவல்கள் தானாகவே அந்தந்த கலங்களில் இடம்பெறும்.விண்ணப்பத்தில் கோரப்படும் பிற விவரங்களை வழங்கினால் போதுமானது.**

12. நிரந்தரப்பதிவில் கட்டணம் செலுத்திவிட்டால் தேர்வுக்கட்டணம் செலுத்தத் தேவையில்லையா?

**ஒருமுறைப் பதிவு என்பது தேர்வுக்கான விண்ணப்பத்திலிருந்து மாறுபட்டதாகும். எனவே, விண்ணப்பதாரர் ஒருமுறைப்பதிவை மேற்கொண்டபின், தேர்வு எழுத விரும்பும் ஒவ்வொரு தேர்விற்கும், உரிய கட்டணத்தை தனித்தனியே செலுத்தி இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.**

13. நிரந்தரப்பதிவில் BC/MBC/SC/ST பிரிவினருக்கு கட்டணசலுகை உண்டா?

**நிரந்தரப்பதிவில் BC/MBC/SC/ST உள்ளிட்ட எந்தப் பிரிவினருக்கும் கட்டணசலுகை கிடையாது. நேரடிப் போட்டித் தேர்விற்கான விண்ணப்ப கட்டண சலுகை தொடர்பாக ஒவ்வொரு தேர்விற்கான அறிவிக்கையை காணவும்.**

14. நிரந்தரப்பதிவில் பதிவேற்றம் செய்ய வேண்டிய புகைப்படம் மற்றும் கையொப்பம் என்ன அளவில் (Size) இருக்க வேண்டும்?

**ஒருமுறைப்பதிவின்போது, விண்ணப்பதாரர் மூன்று மாதங்களுக்குள் எடுக்கப்பட்ட தங்களது புகைப்படத்தினை ஸ்கேன் செய்து,**

**20KB - 50KB அளவில் 'Photograph.jpg' என்றும், கையொப்பத்தினை 10KB - 20KB அளவில் 'Signature.jpg' என்றும் CD / DVD / Pen Drive போன்ற ஏதேனும் ஒன்றில் 200 DPI என்ற அளவில் ஒளிச்செறிவு இருக்குமாறு சேமித்து, பதிவேற்றம் செய்வதற்கு தயாராக வைத்திருக்க வேண்டும்.**

15. நிரந்தரப்பதிவில் எனது சுய விவரப்பக்கத்தில், என்னென்ன தகவல்களை தெரிந்து கொள்ள முடியும்?

**பயனாளர் குறியீடு, மின்னஞ்சல் முகவரி, விண்ணப்பதாரரின் பெயர், தந்தையார் பெயர், தாயார் பெயர், கைபேசி எண், பாலினம், விண்ணப்பதாரர் மற்றும் தந்தையார் பிறந்த மாவட்டம், மதம், வகுப்பு மற்றும் சாதி சான்றிதழ் விவரங்கள், பள்ளி இறுதி வகுப்பு விவரங்கள், தொடர்பு மற்றும் நிரந்தர முகவரி உள்ளிட்ட விவரங்களை விண்ணப்பதாரர் தெரிந்து கொள்ள முடியும்.**

## பிரிவு – III :இணையவழி விண்ணப்பம் (Online Application)

1. தேர்வுக்கு விண்ணப்பிக்கும் முன்னர் என்னென்ன தகவல்களை விண்ணப்பதாரர் தயாராக வைத்திருக்க வேண்டும்?

**நிரந்தரப்பதிவை நிறைவு செய்த விண்ணப்பதாரர்கள், தேர்வுக்கு விண்ணப்பிக்கும் முன்னர், பின்வரும் விவரங்களை தயாராக வைத்திருக்க வேண்டும்:-**

- **கல்வி தகுதி தொடர்பான சான்றிதழில் உள்ள விவரங்கள்.**
- **தொழில்நுட்பத் தகுதி தேவையான பதவிகளுக்கு, அத்தகுதி குறித்த விவரங்கள்.**

- **தகுதி வாய்ந்த நிறுவனத்திலிருந்து பெறப்பட்டமுன்அனுபவச்சான்றிதழில் (Authentic Experience Certificate) உள்ள விவரங்கள்.**

- **விண்ணப்பதாரர் ஆதரவற்ற விதவை, மாற்றுத்திறனாளி மற்றும் முன்னாள் இராணுவத்தினர் உள்ளிட்ட சிறப்பு பிரிவைச் சார்ந்தவராயின், அச்சான்றிதழில் உள்ள விவரங்கள்.**

- **உபயோகத்தில் உள்ள கைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி.**

2. தேர்விற்கு விண்ணப்பித்த பின்பு கைபேசி எண்மற்றும் மின்னஞ்சல் (e-mail)முகவரியை மாற்றிக் கொள்ளலாமா?

   **தேர்விற்கு விண்ணப்பித்த பின்பு கைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் (e-mail) முகவரியை மாற்றிக் கொள்ள இயலாது.ஏனெனில், தேர்வாணையத்திலிருந்து சான்றிதழ் சரிபார்ப்பு/ நேர்முகத் தேர்வு / கலந்தாய்வு குறித்த தகவல்களை விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரிக்கு மட்டுமே அனுப்பப்படும்.**

3. இணையத்தில் (Online) விண்ணப்பித்த பின்பு விண்ணப்பத்தின் நகலினை தேர்வாணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமா?

   **இணையத்தில் (Online) விண்ணப்பித்த பின்பு விண்ணப்பத்தின் நகலினை தேர்வாணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டாம்.**

4. இணையவழி விண்ணப்பத்தில் தேர்ந்தெடுத்த தேர்வு மையங்களை விண்ணப்பித்த பின்பு மாற்றம் செய்யலாமா?

   **இணையவழி விண்ணப்பத்தில் தேர்ந்தெடுத்த தேர்வு மையங்களை விண்ணப்பித்த பின்பு மாற்றம் செய்ய இயலாது.**

5. மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர்கள் பதிலி எழுத்தர் (Scribe) தேவைப்படும் சூழ்நிலையில் எப்பொழுது இக்கோரிக்கையை வைக்க வேண்டும்?

**பதிலி எழுத்தரின் உதவி வேண்டும் என இணையவழி விண்ணப்பத்தில் கோரியதன் பேரில், நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர், பதிலி எழுத்தரின் உதவியைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்படுவார். விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அல்லது தேர்வு நாளன்று பதிலி எழுத்தர் வேண்டும் எனக் கோருவது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.**

6. பதிலி எழுத்தரை தேர்வர்களே தேர்வு மையத்திற்கு அழைத்து வர வேண்டுமா?

**பதிலி எழுத்தரை தேர்வு மையத்திற்கு தேர்வர்கள் அழைத்து வர வேண்டாம்.பதிலி எழுத்தரை (Scribe) தேர்வாணையமே நியமிப்பதுடன் அவர்களுக்கான கட்டணம் தேர்வாணையத்தால் வழங்கப்படும்.பதிலி எழுத்தரின் பணியினை பயன்படுத்திக் கொள்ளும் விண்ணப்பதாரர் பதிலி எழுத்தருக்கென தனியே எந்தத் தொகையும் செலுத்தத் தேவையில்லை.**

7. இணைய வழி விண்ணப்பத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் "Save and Proceed" செய்த பின் மீண்டும் அப்பக்கங்களில் உள்ள தகவலை மாற்றம் செய்ய இயலுமா?

**இணைய வழி விண்ணப்பத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் "Save and Proceed" செய்தப் பின் மீண்டும் அப்பக்கங்களில் உள்ள தகவலை மாற்றம் செய்ய இயலும்.விண்ணப்பத்தினை இறுதியாக சமர்ப்பிக்கும் முன்னர் நன்கு சரிபார்க்க வேண்டும்.விண்ணப்பத்தினை இறுதியாக சமர்ப்பித்த பின்னர் திருத்தம் செய்ய இயலாது.**

8. இணையவழி விண்ணப்பம் முழுவதையும் நிரப்பிய பிறகு "Preview" ஏதாவது பார்க்க முடியுமா?

**விண்ணப்பத்தினை இறுதியாக சமர்ப்பிப்பதற்கு முன்பு, விண்ணப்பத்தினை சரிபார்க்க வாய்ப்பு வழங்கப்படும். இதன்படி "PREVIEW" பொத்தானை அழுத்துகின்றபோது விண்ணப்பதாரரின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சலுக்கு விண்ணப்பத்தின் PREVIEW அனுப்பப்படும். இத்தகவல்விண்ணப்பதாரரின் பதிவு செய்யப்பட்ட கைப்பேசி எண்ணிற்குக் குறுஞ்செய்தியாகவும் (SMS) அனுப்பப்படும்.**

9. "Preview" செய்த பிறகு இணையவழி விண்ணப்பத்தில் மாற்றங்கள் செய்ய இயலுமா?

**இணைய வழி விண்ணப்பத்தினை இறுதியாக சமர்ப்பிப்பதற்கு முன்பு, விண்ணப்பதாரர் மேற்குறிப்பிடப்பட்ட வரைவு விண்ணப்பத்தில் (preview) உள்ள விவரங்களை கவனமாக சரிபார்த்து ஏதேனும் திருத்தங்கள் இருப்பின், விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான இறுதிநாள் வரை அவற்றை சரி செய்து கொள்ளளலாம்.**

10. "Preview" செய்த பிறகு இணைய வழி விண்ணப்பத்தை மீண்டும் சமர்ப்பிக்க வேண்டுமா?

**"Preview" செய்த பிறகு இணைய வழி விண்ணப்பத்தை மீண்டும் சமர்ப்பிக்க வேண்டும்.விண்ணப்பதாரர் இறுதியாக சமர்ப்பி (submit) என்ற பொத்தானை அழுத்துவதன் வாயிலாகவே அவர் ஒரு பதவிக்கு இணைய வழி விண்ணப்பத்தினை சமர்ப்பித்துள்ளார் என கருதப்படும். விண்ணப்பதாரரின் மின்னஞ்சலில் கிடைக்கப்பெற்றpreview-ஐ மட்டும் கொண்டு எவ்வகையிலும் அவர் ஒரு குறிப்பிட்ட தேர்வுக்கு விண்ணப்பித்துள்ளார் எனக் கருத இயலாது.**

11. இணையவழி விண்ணப்பம் சமர்ப்பித்த பிறகு, அச்செடுத்து (Printout) வைத்துக்கொள்ள வேண்டுமா?

**இணையவழி விண்ணப்பம் சமர்ப்பித்த பிறகு, தேவைப்படின் விண்ணப்பத்தினைசேமிக்கலாம்.அச்செடுத்தும் (Print out) வைத்துக் கொள்ளலாம்.**

12. ஒருமுறைப்பதிவு மற்றும் இணையவழி விண்ணப்பம் குறித்து ஐயம் எழுந்தால் யாரை அணுக வேண்டும்?

**ஒருமுறைப்பதிவு மற்றும் இணையவழி விண்ணப்பம் குறித்த சந்தேகங்களை *helpdesk@tnpscexams.in*என்ற மின்னஞ்சலுக்கு (email) அனுப்பலாம்.**

13. தேர்வுக்கட்டணத்தை இணையவழி மூலம் மட்டுமே செலுத்த வேண்டுமா அல்லது அஞ்சலகம் வழியாகவும் செலுத்தலாமா?

**தேர்வுக்கட்டணத்தை இணையவழி மூலம் மட்டுமே செலுத்த இயலும்.**

14. இணைய வழியில் தேர்வுக்கட்டணத்தை செலுத்திய பிறகு அது முறையாக செலுத்தப்பட்டுவிட்டதா என எப்படி உறுதி செய்து கொள்வது?

**தேர்வுக்கட்டணம் செலுத்திய பிறகு "Payment Successful" என்ற pop-up செய்தியைப் பார்த்துஉறுதிசெய்து கொள்ளலாம். OTR Dashboard –ல் Refresh your Previous Payment –ஐ கிளிக் செய்து தெரிந்து கொள்ளலாம்.**

15. இணையவழி விண்ணப்பம் முறையாக செலுத்தப்பட்டுவிட்டது என்பதை எவ்வாறு அறிந்து கொள்வது?

**தேர்வுக்கட்டணம் செலுத்திய பிறகு "Application Submitted Successfully" என்ற pop-upசெய்தியைப் பார்த்துஇணையவழி விண்ணப்பம் முறையாக செலுத்தப்பட்டுவிட்டது என்பதை அறிந்து கொள்ளலாம்.**

16. சான்றிதழ்கள் பதிவேற்றம் முறையாக செய்யப்பட்டு விட்டது என்பதை எவ்வாறு உறுதி செய்து கொள்வது?

**இ-சேவை மையம் வாயிலாக அளிக்கப்படும் ஒப்புகைச் சீட்டின் மூலம் சான்றிதழ்கள் பதிவேற்றம் முறையாக செய்யப்பட்டு விட்டது என்பதை அறிந்து கொள்ளலாம்.OTR Dashboard –ல் பதிவிறக்கம் (download) செய்து பார்த்து கொள்ளலாம்.**

17. தேர்வுக்கூட நுழைவுச்சீட்டினை (Hall Ticket) தேர்வாணையம் அஞ்சல்வழியில் அனுப்பி வைக்குமா?

**தகுதியுள்ள விண்ணப்பதாரருக்கு, தேர்வு எழுதுவதற்கான அனுமதிச்சீட்டு,www.tnpscexams.in /www.tnpsc.gov.in என்ற தேர்வாணைய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும்.விண்ணப்பதாரர் அவற்றை பதிவிறக்கம் செய்து கொள்ளவேண்டும்.அனுமதிச்சீட்டு தனியாக அஞ்சல் மூலம் அனுப்பப்பட மாட்டாது.**

## பிரிவு – IV : சான்றிதழ்கள் (Certificates)

### A. பொதுக் கேள்விகள் (General Queries)

1. விண்ணப்பதாரர்கள் பதிவேற்றம் (upload) செய்ய வேண்டிய சான்றிதழ் படிவங்களை (மாற்றுத்திறனாளி சான்றிதழ், தடையின்மைச் சான்றிதழ் ஆகியன)எங்கு பெற்றுக்கொள்ளலாம்?

**விண்ணப்பதாரர்கள் பதிவேற்றம்(upload) செய்ய வேண்டிய சான்றிதழ் (மாற்றுத்திறனாளி சான்றிதழ், தடையின்மைச் சான்றிதழ் ஆகியன) படிவங்களை தேர்வாணைய இணையதளத்தில் "Forms and Downloads" - Candidate related formats-ஐ கிளிக் செய்து தேவையான படிவங்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.**

2. மூலச்சான்றிதழ்கள்(Original Certificates) எவையேனும்தேர்வாணையத்திடமே ஒப்படைத்துவிட வேண்டுமா?

**மூலச்சான்றிதழ்களை தேர்வாணையத்திடம் ஒப்படைக்க வேண்டியதில்லை.ஏற்கனவே அரசுப்பணியில் இருப்பின், துறை தலைவரால் வழங்கப்படும் "தடையின்மைச் சான்று" மட்டுமே விண்ணப்பதாரரிடமிருந்து அசலாக தேர்வாணையத்தால் பெறப்படும். ஏனைய சான்றிதழ்கள், சான்றிதழ் சரிபார்ப்பிற்கு பிறகு விண்ணப்பதாரரிடமே ஒப்படைக்கப்படும்.**

3. அனைத்து சான்றிதழ்களையும் தேர்வாணைய அறிவிக்கை தேதியிலோ அல்லது அதற்கு முன்னரோ பெற்றிருக்க வேண்டுமா? அல்லது அறிவிக்கை தேதிக்கு பிறகு பெற்று ஒப்படைக்கலாமா?

**கல்வித்தகுதி, முன் அனுபவச் (Experience Certificate) சான்றிதழ் மற்றும் சாதிச் சான்றிதழை தேர்வாணைய அறிவிக்கை தேதியிலோ**

**அல்லது அதற்கு முன்னரோ பெற்றிருக்க வேண்டும்.ஆதரவற்ற விதவை, முன்னாள் இராணுவத்தினர், மாற்றுத்திறனாளி போன்ற சான்றிதழ்கள் தேர்வாணைய அறிவிக்கை தேதிக்குப் பின்னர் பெற்றிருக்கலாம். இருப்பினும், ஆதரவற்ற விதவை அல்லதுமுன்னாள் இராணுவத்தினர் அல்லது மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர், <u>தேர்வாணைய அறிவிக்கைத் தேதியன்று</u> இவ்வகை உரிமைக்கோரும் (claim) தகுதி பெற்றிருக்க வேண்டும்**

4. என்னுடைய மதிப்பெண் சான்றிதழ் இயற்கை இடர்பாடுகளால் அழிக்கப்பட்டது.அதன் நகல் (Duplicate) ஒன்றினைப் பெற்றுள்ளேன். இதனை ஏற்றுக்கொள்வீர்களா?

   **இம்மாதிரியான நிகழ்வுகளினால் நகல் சான்றிதழ் பெற்றிருப்பின், அதனை உரிய துறை/ சான்றிதழ் வழங்கும் அதிகாரியிடம் பெற்று சமர்ப்பிக்கப்படுமாயின், அத்தகைய சான்றிதழ்கள் தேர்வாணையத்தால் ஏற்றுக்கொள்ள இயலும்.**

## B. <u>தேர்வரின் பெயர் (Candidate's Name)</u>

1. என் பெயரை சமீபத்தில் S. தேன்மொழி என்று மாற்றிக்கொண்டேன் ஆனால் என் சான்றிதழ்கள் அனைத்திலும் எனது பெயர் S.தாமரை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதைக்குறித்து என்ன செய்ய வேண்டும்?

   **பெயர்மாற்றம் தொடர்பாக அரசிதழில் அறிவிப்பு செய்து, அதனை தேர்வாணையம் கோரும்போது வழங்க வேண்டும்.**

2. எனது சான்றிதழ்கள் அனைத்திலும் என் பெயர் K.முத்து என்று காணப்படுகிறது. ஆனால், K.முத்து என்ற என் பெயரை தற்போது

"K.முத்து என்கிற வீரன்" என்று பயன்படுத்துகிறேன். இது சம்மந்தமாக அரசிதழ் அறிவிப்பு என்னிடம் உள்ளது. இது போதுமானதா?

**அரசிதழ் அறிவிப்பு போதுமானது.**

## C. தந்தையின்/தாயின் பெயர் (Father's / Mother's Name)

1. என் தந்தையின் பெயர் எனது பள்ளி மாற்றுச் சான்றிதழில் G.பாபுஎன்று குறிப்பிடப்பட்டுள்ளது.ஆனால், என்னுடைய சாதிச் சான்றிதழில் G.பாப்புஎன்று குறிப்பிடப்பட்டுள்ளது. என்ன செய்ய வேண்டும்?

   **தந்தையின் பெயர் குறித்து விண்ணப்பதாரரின் உறுதிமொழியின் அடிப்படையில் சான்றிதழ்கள்ஏற்றுக்கொள்ளப்படும்.**

2. ஒன்பதாவது வகுப்பில் படிக்கும் பொழுது என் தந்தை அவர் பெயரை எம்.பிச்சை-யிலிருந்து எம். சுந்தரம் என்று மாற்றிக் கொண்டார். அதனால் என் சான்றிதழ்கள் அனைத்திலும் எனது பெயர் எஸ். அருள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் எனது சாதிச் சான்றிதழில் எனது பெயர் பி.அருள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. என்ன செய்ய வேண்டும்?

   **தந்தையின் பெயர் மாற்றம் குறித்த அரசிதழ் பதிவின் அடிப்படையில் சான்றிதழ்கள்ஏற்றுக்கொள்ளப்படும்.**

3. என் தாயின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள சாதிச் சான்றிதழ் என்னிடம் உள்ளது. இதனை ஏற்றுக்கொள்வீர்களா?

   **தாயின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள சாதிச் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படும்.**

## D. <u>திருநங்கை (Transgender)</u>

1. திருநங்கைகளுக்கென இடஒதுக்கீடு ஏதும் வழங்கப்படுகிறதா?

**பெண்கள் / மூன்றாம் பாலின (பெண்கள்) விண்ணப்பதாரர் பெண்களுக்கான 30% இடஒதுக்கீட்டில் போட்டியிட தகுதியானவர். மேலும், அவர்கள் மீதமுள்ள 70% காலிப்பணியிடங்களுக்கான இடஒதுக்கீட்டில், ஆண்கள் / மூன்றாம் பாலினத்தவர்கள் / மூன்றாம் பாலின (ஆண்கள்) விண்ணப்பதாரருடன் சேர்ந்து போட்டியிடத் தகுதியானவர்கள்.திருநங்கைகளை மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக தமிழ்நாடு அரசு பட்டியலிட்டுள்ளது.எனவே திருநங்கைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 20% இடஒதுக்கீட்டில் போட்டியிடத் தகுதியானவர்.**

2. ஒரு திருநங்கை இதற்குச் சான்றாக எவ்வித சான்றிதழ்கள் சமர்ப்பிக்க வேண்டும்?

**திருநங்கை என்பதற்கான சான்றாக தமிழ்நாடு திருநங்கை நலவரியத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை சான்றாக சமர்ப்பிக்கலாம்.**

3. திருநங்கைகளை மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக தமிழ்நாடு அரசு பட்டியலிட்டுள்ளது.ஆனால், என்னிடம் சாதி சான்றிதழ் எதுவும் இல்லை. சாதி வாரியான இடஒதுக்கீட்டை விண்ணப்பத்தில் கோர இயலுமா?

**எந்தவொரு சாதிச்சான்றிதழும் இல்லாத திருநங்கை விண்ணப்பதாரர்கள், தங்களது இணையவழி விண்ணப்பத்தில் ஏனையோர் பிரிவினையோ அல்லது அரசாணை (நிலை) எண்.28, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும்**

**பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 06.04.2015-ன்படி, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பிரிவினையோ தேர்வு செய்து கொள்ளலாம்.**

4. விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளின் இணைப்பில் திருநங்கைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர். ஆதிதிராவிடர் வகுப்பை சார்ந்தவர் என்பதற்கான சாதி சான்றிதழ் என்னிடம் உள்ளது. மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான சான்றிதழை புதியதாக பெற வேண்டுமா?

**சாதிச் சான்றிதழ் வைத்துள்ள ஆதிதிராவிடர்/ஆதிதிராவிட (அருந்ததியர்)/ பழங்குடியினர் வகுப்பினைச் சார்ந்த திருநங்கை விண்ணப்பதாரர்கள், ஆதிதிராவிடர்/ஆதிதிராவிட (அருந்ததியர்)/ பழங்குடியினர் சமூகத்தினைச் சார்ந்தவர்களாகவே கருதப்படுவர்.**

5. பிற்படுத்தப்பட்ட வகுப்பை சார்ந்தவர் என்பதற்கான சாதி சான்றிதழ் என்னிடம் உள்ளது. இச்சான்றிதழையே பயன்படுத்தலாமா அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான சான்றிதழை புதியதாகபெற வேண்டுமா?

**தங்களது இணையவழி விண்ணப்பத்தில் பிற்படுத்தப்பட்ட வகுப்பை தேர்வு செய்துஅதற்கான சாதி சான்றிதழை பயன்படுத்திக்கொள்ளலாம் அல்லது அரசாணை (நிலை) எண்.28, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 06.04.2015-ன்படி, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பிரிவினையோ தேர்வு செய்து கொள்ளலாம்.**

6. கேரளா திருநங்கை நலவாரியத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை உள்ளது. இதனை தமிழ்நாடு அரசு பணிக்காக விண்ணப்பிக்க பயன்படுத்தி கொள்ளலாமா?

**கேரளா அல்லது இதர மாநிலங்களின் திருநங்கை நலவாரியத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை தேர்வாணையத்தால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

7. திருநங்கை என்பதற்கான மருத்துவ சான்றிதழ் என்னிடம் உள்ளது. இதனைப் பயன்படுத்தி விண்ணப்பிக்க இயலுமா?

**திருநங்கை என்பதற்கான சான்றாக மருத்துவ சான்றிதழ் இருந்தாலும், திருநங்கை நலவரியத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை மட்டுமே சான்றாக ஏற்றுக்கொள்ளப்படும்.**

## E. <u>பிறந்த தேதி (Date of Birth)</u>

1. பிறந்த தேதிக்கு மூலசான்றாக (Original Certificate) எவ்வித சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

**தமிழ்நாடு இடைநிலைக் (SSLC) கல்வி வாரியம்/குழுமம் (State Board of School Examinations (Secondary),Tamil Nadu) அல்லது தமிழ்நாடு மேல்நிலைக் (HSC) கல்வி வாரியம்/குழுமம்(State Board of School Examinations (Higher Secondary), Tamil Nadu)முறையே வழங்கிய பத்தாம் வகுப்பு அல்லது பன்னிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.**

2. 10 வது மற்றும் 12 வது வகுப்பு மதிப்பெண் சான்றிதழில் எனது பிறந்த தேதி குறிப்பிடவில்லை. பிறந்த தேதிக்கு மூலசான்றாக எவ்வித சான்றிதழை சமர்ப்பிக்கவேண்டும்?

**பிறந்த தேதி குறிப்பிடப்படாமல் இருக்கும் மதிப்பெண் பட்டியலுக்கு பதிலாக தங்களது மாற்றுச் சான்றிதழை / பிறப்புச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.**

3. பிறந்த தேதிக்கான சான்றாக நோட்டரி பப்ளிக் மூலம் சான்றளிக்கப்பட்ட உறுதிமொழிப் பத்திரத்தை சமர்ப்பிக்க முடியுமா?

பிறந்த தேதிக்கான சான்றாக நோட்டரி பப்ளிக் மூலம் சான்றளிக்கப்பட்ட உறுதிமொழிப் பத்திரத்தை**ஏற்றுக்கொள்ள இயலாது.**

## F. <u>மதம் (Religion)</u>

1. ஒரு இந்து ஆதிதிராவிட வகுப்பை சேர்ந்தவன். எனது சமூக சான்றிதழ் உட்பட எனது எந்த ஆவணத்திலும் எனது சமயம் குறிப்பிடப்படவில்லை. இதனால் ஏதாவது பிரச்சனை வருமா?

சில பதவிகளின் தெரிவிற்கு ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமே தகுதியாக இருப்பின், இணைய வழி விண்ணப்பத்தில், விண்ணப்பதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள மதம் தொடர்பான தகவலுக்கு ஆதரவாக அவர்களது சாதிச் சான்றிதழ்/ வருவாய்த்துறை அலுவலர்களால் இது குறித்து வழங்கப்பட்ட சான்றிதழைப் பதிவேற்றம் செய்ய/ சமர்ப்பிக்க வேண்டும்.(**எடுத்துக்காட்டு: இந்து அறநிலையத் துறையில் செயல் அலுவவர் , உதவி ஆணையர் போன்ற பணிகள்**) இதர பதவிகளுக்கு சமயம்

குறித்த பதிவு எவ்வித சான்றிதழ்களிலும் இடம்பெறத் தேவையில்லை.

## G. சாதி அடிப்படையிலான இடஒதுக்கீடு(Communal Reservation)

1. பெண்களுக்கான இடஒதுக்கீட்டின் விழுக்காடு என்ன?

**மொத்தம் கணக்கிடப்பட்டுள்ள காலிப்பணியிடங்களில், குறைந்தபட்சம் 30% பெண் விண்ணப்பதாரர்களுக்கு இடஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஒவ்வொருசாதி பிரிவு மற்றும் பொதுப்பிரிவில், இடஒதுக்கீட்டின்படி, 30% காலிப்பணியிடங்கள் பெண் விண்ணப்பதாரர்களுக்கு இடஒதுக்கீடு செய்யப்படுகிறது.பெண்கள் / மூன்றாம் பாலின (பெண்கள்) விண்ணப்பதாரர் மேற்குறிப்பிடப்பட்ட30% இடஒதுக்கீட்டில் போட்டியிட தகுதியானவர்.மேலும், அவர்கள் மீதமுள்ள 70%காலிப்பணியிடங்களுக்கான இடஒதுக்கீட்டில், ஆண்கள் / மூன்றாம் பாலினத்தவர்கள் / மூன்றாம் பாலின (ஆண்கள்) விண்ணப்பதாரருடன் சேர்ந்து போட்டியிடத் தகுதியானவர்கள்.**

2. எனது சாதிக்கான சான்றாக என்னிடம் e-community certificate மட்டுமே உள்ளது. இது போதுமானதா அல்லது சாதி சான்றிதழை அட்டை வடிவத்தில் பெற வேண்டுமா?

**e-Community certificate போதுமானது.சாதி சான்றிதழை அட்டை வடிவத்தில் பெற வேண்டியதில்லை.**

3. திருமணத்திற்கு பிறகு என்னுடைய கணவரின் சமயத்திற்கு மாறிவிட்டேன். தற்பொழுது என் கணவரின் சமய வழக்கங்களின் முறைப்படி வாழ்ந்து வருகிறேன். எனவே, எனது கணவரின்

சாதியை அடிப்படையாக கொண்டு சாதி சான்றிதழை பெற்று சமர்ப்பிக்கலாமா?

**கணவர் பெயரை / கணவர்சார்ந்த சாதிப் பெயரைக் குறிப்பி பெறப்பட்ட சாதிச்சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

4. எனது தந்தையின் பூர்வீகம் கடலூர் மாவட்டம். ஆனால் அவருடைய பிறப்பிடம் புதுச்சேரி. பிற்படுத்தப்பட்ட வகுப்பை சார்ந்தவன் என்ற சாதி சான்றிதழ் மண்டல துணை வட்டாட்சியர், கடலூர் மாவட்டம் அவர்களால் வழங்கப்பட்டது. என் தந்தையின் பிறப்பிடம் புதுச்சேரி என்பதால் ஏதாவது பிரச்சனை வருமா?

   **இது குறித்து ஏதும் பிரச்சனை எழாது.**

5. பெற்றோர் கலப்பு திருமணம் செய்திருந்தால் அவர்களது பிள்ளைகள் தந்தையின் சாதியின் அடிப்படையில் மட்டுமே சாதி சான்றிதழைப் பெற வேண்டுமா?

   **பெற்றோர் கலப்பு திருமணம் செய்திருந்தால்,தந்தை சார்ந்த சாதி பெயரிலோ அல்லது தாயார் சார்ந்த சாதி பெயரிலோ சாதிச் சான்றிதழ் பெறலாம்.**

6. தந்தையின் பெயர் எனது சாதி சான்றிதழில் திருத்தப்பட்டுள்ளது. இதனை ஏற்றுக்கொள்வீர்களா?

   **தந்தையின் பெயர் மாற்றம் குறித்த அரசிதழ் பதிவின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்படும்.**

7. என்னுடைய சாதி சான்றிதழை பயணத்தின் பொழுது தொலைத்து விட்டேன். எனவே புதிய சாதி சான்றிதழை மீண்டும் பெற்றுள்ளேன். இதனை ஏற்றுக்கொள்வீர்களா?

**ஏற்றுக்கொள்ளப்படும்.**

## H. <u>மாற்றுத் திறனாளிகள் (Persons with Benchmark Disability)</u>

1. மாற்றுத்திறனாளிகள் அளிக்க வேண்டிய சான்றிதழ் படிவம் எங்கு பெறப்படலாம்?

**மாற்றுத்திறனாளிகள் அளிக்க வேண்டிய சான்றிதழ் படிவம் தேர்வாணைய இணையதளத்தில் "Forms and Downloads" -Candidate related formats-ஐ கிளிக் செய்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.**

2. அரசாங்கம் தற்பொழுது மாற்றுத்திறனாளிகள் அளிக்க வேண்டிய சான்றிதழின் புதிய படிவத்தை வெளியிட்டுள்ளது. ஆனால் அச்சான்றிதழை பழைய படிவத்தில் ஏற்கனவே பெற்றுள்ளேன். புதிய படிவத்தில் சான்றிதழை அளிக்க வேண்டுமா?

**புதிய படிவத்தில் சான்றிதழை அளிக்க வேண்டியதில்லை.ஆனால்,பழைய படிவத்தில்பெறப்பட்டஅச்சான்றிதழ் தகுதி வாய்ந்த அலுவலரால் அல்லது இணையான உயர் அலுவலரால் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.**

3. இயலாமை விழுக்காடு கட்டாயமாக மாற்றுத்திறனாளி சான்றிதழில் சொல்லப்பட்டிருக்க வேண்டுமா?

**ஆம்.ஆனால், குறிப்பிட்ட இயலாமையின் அளவு அளவிடக்கூடிய வகையில் வரையறுக்கப்படாமல் இருந்தால் விழுக்காடு தேவையில்லை.**

4. மாற்றுத் திறனாளிகள் சான்றிதழை வழங்க கூடிய அலுவலர்கள் யாவர்?

**மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் விதி, 2017-ல் (மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரமளித்தல் துறை (Divyangjan), சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம், இந்திய அரசு) குறிப்பிடப்பட்டுள்ள கீழ்காணும் படிவத்தில் அரசாணை (நிலை) எண்.28, மாற்றுத்திறனாளிகள் (DAP.3.1) நலத்துறை, நாள் 27.07.2018-ல், வரையறுக்கப்பட்டுள்ள சான்றிதழ் வழங்கக் கூடிய தகுதி வாய்ந்த அலுவலரிடமிருந்து பெறப்பட்ட மாற்றுத்திறனாளிச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.**

5. மாற்றுத் திறனாளிகள் சான்றிதழ் தனியார் மருத்துவமனையில் இருந்தோ அல்லது மருத்துவரிடமிருந்தோ பெறலாமா?

**அரசுஅலுவலரல்லாத மருத்துவ அலுவலரால் மாற்றுத் திறனாளி சான்றிதழ் வழங்கப்பட்டிருப்பின் அச்சான்றிதழ் இணை இயக்குநர் மருத்துவப் பணிகள் அவர்களால் மேலொப்பம் இடப்பட்டிருந்தால் மட்டுமே கருத்தில் கொள்ளப்படும்.**

6. மாற்றுத் திறனாளிகள் இடஒதுக்கீட்டின் விழுக்காடு என்ன?

**மாற்றுத் திறனாளிகள் இடஒதுக்கீட்டின் விழுக்காடு4%.நேரடி நியமனங்களில், ஆதிதிராவிடர்/ஆதிதிராவிடர் அருந்ததியினர் (முன்னுரிமை அடிப்படையில்) / பழங்குடியினர்/ மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர்/ இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர் மற்றும் பொது பிரிவு ஆகிய ஒதுக்கீட்டுப் பிரிவுகளில் கீழ்காணும் (i), (ii) மற்றும் (iii) பிரிவுகளைச் சார்ந்த நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகளுக்கு தலா 1 சதவீதமும்,**

(iv) மற்றும் (v) ஆகிய இரண்டு பிரிவுகளைச் சார்ந்த நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு சேர்த்து 1 சதவீதமும், மொத்தம் 4 சதவீத இடஒதுக்கீடு மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(i) பார்வையற்றோர் (Blind) மற்றும் குறைந்த பார்வைத் திறனுடையவர் (Visually Impaired).

(ii) காது கேளாதோர் (Deaf) மற்றும் கேட்புத்திறனில் மந்தத்தன்மை (Hard of Hearing).

(iii) கை, கால்களில் குறைபாடுடையவர், மூளைவாதம், தொழு நோயிலிருந்து மீண்டவர், வளர்ச்சி குறைபாடுடையோர், அமிலவீச்சில் பாதிக்கப்பட்டோர் மற்றும் தசைநார் தேய்மானமுற்றோர்.

(iv) ஆட்டிசம், அறிவுசார் குறைபாடுடையோர், குறிப்பிடத்தக்க வகையிலான கற்கும் ஆற்றலில் குறைபாடு மற்றும் மனநலிவு நோய்.

(v) மேற்கூறப்பட்ட (i) முதல் (iv) வரை குறைபாடுகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட குறைபாடுகளைப் பெற்றிருத்தல் மற்றும் காதுகேளாமையுடன் பார்வைத்திறன் குறைவு உட்பட பலவகையான இயலாமை.

7. மாற்றுத் திறனாளிகளுக்கான இடஒதுக்கீடு எந்தெந்த பணிகளில் வழங்கப்படுகிறது?

மாற்றுத் திறனாளிகளுக்கான இட ஒதுக்கீடு Group –C மற்றும் D பிரிவில் உள்ள அனைத்து பணிகளுக்கும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட Group – A மற்றும் B பிரிவில் குறிப்பிட்ட பதவிகளுக்கும் வழங்கப்படுகிறது.

## I. ஆதரவற்ற விதவை (Destitute Widow)

1. ஆதரவற்ற விதவைக்கான இடஒதுக்கீடு எந்தெந்த பணிகளில் வழங்கப்படுகிறது?

**மாநில அரசின் கீழ் ஊதிய நிலை ரூ.20600-65500/-க்கு (திருத்தப்பட்ட சம்பளம்) மிகாத பதவிகளுக்கு பெண் விண்ணப்பதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடங்களில், 10% பணியிடங்கள் அந்தந்த ஒதுக்கீட்டுப் பிரிவைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகளுக்கு வழங்கப்படும்.**

2. ஆதரவற்ற விதவைகளுக்கான இடஒதுக்கீட்டிற்கான விழுக்காடு என்ன?

**ஆதரவற்ற விதவைகளுக்கான இட ஒதுக்கீடு - 10% (பெண்களுக்கான 30 சதவீதத்தில் 10 சதவீதம் - குறிப்பிட்ட பதவிகளில்)**

3. என் கணவரின் மறைவிற்கு விதவைசான்றிதழ் பெற்றுள்ளேன். ஆதரவற்ற விதவைகளுக்கான இடஒதுக்கீட்டில் விண்ணப்பிக்கலாமா?

**விதவை சான்றிதழ் ஆதரவற்ற விதவை சான்றிதழிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். "ஆதரவற்ற விதவை" என்பவர் அனைத்து வழியிலிருந்தும் பெறும் மொத்த மாத வருமானம் ரூ.4,000/-க்கும் (ரூபாய் நான்காயிரம் மட்டும்) மிகாமல் பெறுகின்றவரைக் குறிப்பதாகும். இவ்வருமானம், குடும்ப ஓய்வூதியம் அல்லது தொழிற்கல்வி பெற்றவர்களின் சுயதொழில் மூலம் ஈட்டும் வருமானம்,விளைநிலங்களிலிருந்து பெறப்படும் வருமானம் உள்ளிட்ட மற்ற அனைத்து வருமானங்களையும்**

**உள்ளடக்கியதாகும். இத்தகைய விண்ணப்பதாரர், உரிய வருவாய் கோட்ட அலுவலர் அல்லது மாவட்ட உதவி ஆட்சியர் அல்லது சார் ஆட்சியரிடமிருந்து நிர்ணயிக்கப்பட்டப் படிவத்தில் சான்றிதழைப் பெற்று சமர்ப்பிக்க வேண்டும். விவாகரத்து பெற்றவர், கணவரால் கைவிடப்பட்டவர் ஆதரவற்ற விதவையாகக் கருதப்படமாட்டார். விண்ணப்பதாரர் தேர்வு அறிவிக்கை நாளன்று ஆதரவற்ற விதவையாக இருத்தல் வேண்டும்.**

4. கணவரிடமிருந்து மணமுறிவு (டிவர்ஸ்) பெற்று உள்ளேன்/பிரிந்துள்ளேன். ஆதரவற்ற விதவைகளுக்கான இடஒதுக்கீட்டில் விண்ணப்பிக்கலாமா?

**விண்ணப்பிக்க இயலாது.**

5. விண்ணப்பித்த சில மாதங்களில் எனது கணவர் இறந்து விட்டார். எனது வாழ்வாதாரத்திற்கு எவ்வித வருமானமும் இல்லை. ஆதலால் ஆதரவற்ற விதவைகளுக்கான இடஒதுக்கீடுகோர இயலுமா?

**கோர இயலாது.**

6. என்னுடைய ஆதரவற்ற விதவைசான்றிதழில் எனது கணவரின் இறப்பு தேதி திருத்தப்பட்டுள்ளது. இச்சான்றிதழ் ஏற்றுக் கொள்ளப்படுமா?

**ஆதரவற்ற விதவைச் சாறிதழில் ஏதேனும் திருத்தம் செய்யப்பட்டிருப்பின், அத்ததிருத்தம் சான்றிதழ் வழங்கும் அலுவலரால் சான்றொப்பமிடப்பட்டிருக்க வேண்டும் அல்லது அதற்கு பதிலாக புதிய சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.**

7. ஏற்கனவே ஆதரவற்ற விதவை இடஒதுக்கீட்டின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசு பணியில் உள்ளேன். இப்பொழுது வேறொரு பணிக்காக விண்ணப்பித்துள்ளேன். என்னை ஆதரவற்ற விதவை என கருதுவீர்களா?

**ஆதரவற்ற விதவையாக கருத இயலாது.**

8. ஏற்கனவே பணிபுரிந்துவரும் நபர் ஆதரவற்ற விதவைஅடிப்படையில் தேர்வு கட்டண விலக்கு மற்றும் இடஒதுக்கீடு கேட்டு விண்ணப்பிக்கலாமா?

**மாத வருமானம் ரூ.4,000/-க்குள் பெறுகின்றவர் ஆதரவற்ற விதவை அடிப்படையில் தேர்வுக் கட்டண விலக்கு மற்றும் இடஒதுக்கீடு கேட்டு விண்ணப்பிக்கலாம்.**

## J. முன்னாள் இராணுவத்தினர் (Ex-servicemen)

1. எந்தெந்த பணிகளில் முன்னாள் படைவீரர்கள் /இராணுவ வீரர்கள் இடஒதுக்கீடுவழங்கப்படுகிறது. இடஒதுக்கீட்டின் விழுக்காடு என்ன?

**Group-C பதவிகளில் மட்டும் முன்னாள் இராணுவத்தினருக்கான இட ஒதுக்கீடு - 5% வழங்கப்படுகிறது.**

2. தற்சமயம் தரைப்படையில்/கடற்படையில்/விமானபடையில்பணிபுரிகிறேன். விடுவிக்கப்பட்ட பிறகு அரசுப் பணிக்குவிண்ணப்பிக்க விரும்புகிறேன். அவ்வாறுவிண்ணப்பிக்கலாமா?

**அறிவிக்கை வெளியிட்டு, விண்ணப்பங்கள் பெறப்படுவதற்கான இறுதிநாளிலிருந்து ஓராண்டுக்குள், முப்படைப்பணியிலிருந்து விடுவிப்பு பெறவிருக்கும் இராணுவ வீரர்கள் விண்ணப்பிக்கலாம்.**

3. தற்சமயம் தரைப்படையில்/கடற்படையில்/விமானப் படையில்பணிபுரிகிறேன். சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்பட்டுள்ளேன். முன்னாள் படைவீரர்களான இடஒதுக்கீட்டிற்கு சான்றாகஎவ்வித சான்றிதழ்களை அளிக்க வேண்டும்?

**தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பட்டியல் XII-ல் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு உறுதிமொழியினையும், சான்றிதழையும் சமர்ப்பிக்கவேண்டும்.**

4. சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்பட்டுள்ளேன். முன்னாள் இராணுவவீரருக்கான இடஒதுக்கீட்டிற்கு சான்றாக எனக்கு படையில் பணிபுரிந்தபோது வழங்கப்பட்ட பாஸ்புத்தகத்தை (Pass Book) சமர்ப்பிக்கலாமா?

**பாஸ்புத்தகம் சமர்ப்பித்தால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

5. எனது தந்தை படைவீரராக பணியாற்றினார். முன்னாள் படைவீரருக்கான இடஒதுக்கீட்டில் விண்ணப்பிக்கலாமா?

**விண்ணப்பிக்க இயலாது.**

6. எல்லை பாதுகாப்பு படையில் (Border Security Force) 15 வருடங்களாக பணிபுரிந்தேன். பிறகு விடுவிக்கப்பட்டேன். முன்னாள் படைவீரர்களுக்கான இடஒதுக்கீட்டில் விண்ணப்பிக்கலாமா?

**விண்ணப்பிக்க இயலாது.**

7. தற்சமயம் அரசு துறையில் தட்டச்சராக பணிபுரிகிறேன். முன்னாள் படைவீரருக்கான இடஒதுக்கீடு/தேர்வு கட்டணச் சலுகை/வயது வரம்பு சலுகை ஆகியவற்றை துய்க்கலாமா?

முன்னாள் படைவீரருக்கான இட ஒதுக்கீடு,தேர்வுக்கட்டணச் சலுகை மற்றும் வயது வரம்பு சலுகையினை கோர இயலாது.

K. வேலைவாய்ப்பு (Employment)

1. தேர்வாணையத்திற்கு விண்ணப்பிக்கும் போது எந்தவிதமான அரசு பணியிலும் பணியாற்றவில்லை. ஆனால் தற்பொழுது ஒரு அரசுப்பணியில் சேர்ந்துள்ளேன். இத்தகவலை தேர்வாணையத்திடம் தெரிவிக்க வேண்டுமா? சான்றிதழை சரிபார்க்கும் போது தடையின்மை சான்றிதழை (No Objection Certificate)அளிக்க வேண்டுமா?

தேர்வாணையத்திடம் தெரிவிக்க வேண்டும்.சான்றிதழை சரிபார்க்கும் போது தடையின்மை சான்றிதழை (No Objection Certificate) அளிக்க வேண்டும்.

2. தேர்வாணையத்திற்கு விண்ணப்பிக்கும் போது அரசுப் பணியில் இருந்தேன். ஆனால் பிறகு பதவி விலகல் (resigned) பெற்று விட்டேன். தற்போது எவ்வித பணியிலும் இல்லை. பதவி விலகல் செய்ததற்கு சான்றாக ஏதேனும் சான்றிதழ்கள் சமர்ப்பிக்க வேண்டுமா?

துறைத்தலைவர் பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்டற்கான ஆணையினை சமர்ப்பிக்க வேண்டும்.

## L. தமிழ் பயிற்று மொழியில் கல்வி பயின்றோர் (Persons Studied in Tamil Medium)

1. தமிழைப் பயிற்று மொழியாகக் (Tamil Medium)கொண்டு கல்வி பயின்றோருக்கான இட ஒதுக்கீட்டினைத் துய்ப்பதற்கு எந்த வகுப்பிலிருந்து தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு பயின்றிருக்க வேண்டும்?

தமிழ்பயிற்று மொழியில் படித்த நபர்எனில், மாநிலத்தில் நேரடி நியமனத்தின் வாயிலாக நிரப்பப்படும் பதவிகளுக்கான சிறப்பு விதிகளில் பரிந்துரைக்கப்பட்ட கல்வித் தகுதி வரை தமிழ் வழியில்படித்தவராவார்.

விளக்கம் : இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக-

(i) பள்ளி இறுதி வகுப்பு (SSLC) கல்வித்தகுதியாக நிர்ணயிக்கப்பட்ட நேர்வுகளில், ஒருவர் ஒன்றாம் வகுப்பு முதல் பள்ளி இறுதி வகுப்பு (SSLC) வரை தமிழ்பயிற்று மொழியில் படித்திருக்க வேண்டும்.

(ii) மேல்நிலை வகுப்பு (HSC) கல்வித்தகுதியாக நிர்ணயிக்கப்பட்ட நேர்வுகளில், ஒருவர் ஒன்றாம் வகுப்பு முதல் பள்ளி இறுதி வகுப்பு (SSLC) மற்றும் மேல்நிலை வகுப்பு (HSC) ஆகியவற்றைத் தமிழ்பயிற்று மொழியில் படித்திருக்க வேண்டும்.

(iii) பட்டயப்படிப்பு (Diploma) கல்வித்தகுதியாக நிர்ணயிக்கப்பட்ட நேர்வுகளில், ஒருவர் ஒன்றாம் வகுப்பு முதல் பள்ளி இறுதி வகுப்பு (SSLC) மற்றும் பட்டயப்படிப்பு (Diploma) ஆகியவற்றை தமிழ்பயிற்று மொழியில் படித்திருக்க வேண்டும். பட்டயப் படிப்பை (Diploma) மேல்நிலை வகுப்புக்கு (HSC) பிறகு படித்திருப்பின், பள்ளியிறுதி வகுப்பு (SSLC), மேல்நிலை வகுப்பு (HSC) மற்றும் பட்டயப் படிப்பு (Diploma) ஆகியவற்றை தமிழ் பயிற்று மொழியில் படித்திருக்க வேண்டும்.

**(iv)** பட்டப்படிப்பு கல்வித்தகுதியாக நிர்ணயிக்கப்பட்ட நேர்வுகளில், ஒருவர் ஒன்றாம் வகுப்பு முதல் பள்ளி இறுதி வகுப்பு (**SSLC**), மேல்நிலை வகுப்பு (**HSC**) மற்றும் பட்டப்படிப்பு (**Degree)** ஆகியவற்றை தமிழ்பயிற்று மொழியில் படித்திருக்க வேண்டும்.

**(v)** முதுநிலை பட்டப்படிப்பு கல்வித்தகுதியாக நிர்ணயிக்கப்பட்ட நேர்வுகளில், ஒருவர் ஒன்றாம் வகுப்பு முதல் பள்ளி இறுதி வகுப்பு (**SSLC**), மேல்நிலை வகுப்பு (**HSC**), பட்டப்படிப்பு (**Degree)** மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு (**PG Degree)** ஆகியவற்றை தமிழ்பயிற்று மொழியில் படித்திருக்க வேண்டும்.

2. தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டுகல்வி பயின்றோருக்கான இடஒதுக்கீட்டின் விழுக்காடு என்ன?

**தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றோருக்கான இட ஒதுக்கீடு-20% (முன்னுரிமை அடிப்படையில்)**

3. ஒன்றாம் வகுப்பு முதல் நான்காம் வகுப்பு வரை ஆங்கிலத்தைப் (English Medium) பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றேன். பிறகு ஐந்தாம் வகுப்புமுதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை மற்றும் பட்டப்படிப்பு தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றேன். தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றோருக்கான இடஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கலாமா?

**தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றோருக்கான இடஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்க இயலாது.**

4. பத்தாம் வகுப்புத் தேர்வினை தனித் தேர்வராக எழுதினேன். பிறகு பதினொன்று, பன்னிரண்டு மற்றும் பட்டப்படிப்பைத்தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றேன். தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றதற்கான இடஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கலாமா?

**தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றோருக்கான இடஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்க இயலாது.**

5. ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றேன். படித்த பட்டப்படிப்பு ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டுமட்டுமே கற்பிக்கப்பட்டது. இச்சூழலில் பட்டப்படிப்பு தகுதியாக கொண்ட பணிகளுக்கு தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றோருக்கான இடஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கலாமா?

**பட்டப்படிப்பு தகுதியாக கொண்ட பணிகளுக்கு தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றோருக்கான இடஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்க இயலாது. ஆனால் பத்தாம், பன்னிரெண்டாம் வகுப்பு தகுதியாகக் கொண்ட பணிகளுக்கு தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றோருக்கான இடஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கலாம்.**

6. ஒன்றாம் வகுப்புமுதல் பனிரெண்டாம் வகுப்பு வரை தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றேன். பிறகு பட்டப்படிப்பை தொலைதூரக் கல்வி முறையில் பயின்று, தேர்வுகளை தமிழில் எழுதினேன். எனவே பட்டப்படிப்பு தகுதியாகக் கொண்ட பணிகளுக்கு தமிழைப் பயிற்று

மொழியாகக் கொண்டு கல்வி பயின்றோருக்கான இடஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கலாமா?

**தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றோருக்கான இடஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கலாம்.**

7. கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் நேரடியாக மூன்றாம் வகுப்பில் அனுமதிக்கப்பட்டேன். மூன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை மற்றும் பட்டயப்படிப்பு தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றேன். தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றோருக்கான இடஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கலாமா?

**தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றோருக்கான இடஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்க இயலாது.**

8. தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றோருக்கான இடஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிப்பதற்கு தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு படித்தோருக்கான கல்வி உதவி தொகையை பெற்றிருப்பது கட்டாயமா?

**இல்லை.**

9. ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு பயின்ற பள்ளி முழுவதுமாக மூடப்பட்டது. எனவே தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றதற்கான சான்றிதழை எங்கு பெற வேண்டும்?

**தொடர்புடைய மாவட்ட கல்வி அலுவலர்/ முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றதற்கான சான்றிதழைப் பெற வேண்டும்.**

10. தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றேன் என்று என்னுடைய மதிப்பெண் பட்டியல்/மாற்று சான்றிதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது போதுமானதா அல்லது தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றதற்கான சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டுமா?

**தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றதற்கான பதிவு மதிப்பெண் பட்டியல் / மாற்று சான்றிதழில் குறிப்பிடப்பட்டிருந்தால் போதுமானது.**

11. ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றேன். பட்டப்படிப்பு ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டுகல்வி பயின்றேன். ஆனால், தேர்வினை தமிழில் எழுத அனுமதிக்கப்பட்டேன். தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றோருக்கான இடஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கலாமா?

**பட்டப்படிப்பு தகுதியாக கொண்ட பணிகளுக்கு தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றோருக்கான இடஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்க இயலாது.**

12. ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றேன். பட்டப்படிப்பு ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டுபயின்றேன். பிறகு

வேறொரு பட்டப் படிப்பை தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றேன். பட்டப்படிப்பு தகுதியாக கொண்ட பணிகளுக்கு தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றோருக்கான இடஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கலாமா?

**தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றோருக்கான இடஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கலாம்.**

## M. குற்றவியல் வழக்குகள் / ஒழுங்கு நடவடிக்கைகள் (Criminal Cases / Disciplinary Cases)

1. இணைய வழி விண்ணப்பத்தில் நிலுவையிலுள்ள குற்றவியல் / ஒழுங்கு நடவடிக்கைகள் குறித்து தெரிவிக்க வேண்டுமா? இது தொடர்பான ஆவணங்கள் ஏதேனும் சமர்ப்பிக்க வேண்டுமா?

   **இணைய வழி விண்ணப்பத்தில் நிலுவையிலுள்ள குற்றவியல் / ஒழுங்கு நடவடிக்கைகள் குறித்து விண்ணப்பதாரர் தெரிவிக்க வேண்டும்.இது தொடர்பான முதல் தகவல் அறிக்கையின் நகலை (FIR) / குற்றக் குறிப்பாணை (Memorandum of Charges) / காரணம் கேட்கும் குறிப்பாணையின் (Show cause Notice) நகலை (நேர்வுக்கேற்ப) கண்டிப்பாக பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்க வேண்டும்.**

2. குற்றவியல் நடவடிக்கைகளில்குற்றத் தீர்ப்பு / ஒழுங்கு நடவடிக்கைகளில் தண்டனை விதிக்கப்பட்டிருந்தால் எவ்வித ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்?

   **விண்ணப்பதாரர், தங்கள் மீதான குற்றவியல் நடவடிக்கைகளில் குற்றத் தீர்ப்பு / ஒழுங்கு நடவடிக்கைகளில் தண்டனை**

**விதிக்கப்பட்டது தொடர்பாக தங்களது இணைய வழி விண்ணப்பத்தில் தெரிவிப்பதுடன், கோரும்பொழுது தொடர்புடைய நீதிமன்ற குற்றவியல் தண்டனைக்கான ஆணை அல்லது விடுவிக்கப்பட்ட ஆணை அல்லது ஒழுங்கு நடவடிக்கை சார்ந்த குறிப்பாணையினை பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்க வேண்டும்.**

3. விண்ணப்பம் சமர்ப்பித்த பிறகு குற்றவியல் வழக்கு பதியப்பட்டிருந்தாலோ / ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலோ இதனை தேர்வாணையத்திடம் தெரிவிக்க வேண்டுமா?

**தடையின்மைச் சான்றிதழை சமர்ப்பித்த பிறகோ அல்லது இணையவழி விண்ணப்பத்தினை சமர்ப்பித்த பிறகோ, நியமனம் தொடர்பான பணிகள் முழுமையாக நிறைவடைவதற்கு முன் வரை உள்ள தெரிவு பணிகளின் எந்த ஒரு நிலையின் போதும் விண்ணப்பதாரர் மீது, ஏதேனும் குற்றவியல் வழக்கு பதியப்பட்டிருந்தாலோ / ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலோ, அவர் குற்றத்தீர்ப்பு / தண்டனை ஏதும் பெற்றிருந்தாலோ, தேர்வாணையத்தால் ஆவணங்களைப் பதிவேற்றம் / சமர்ப்பிக்கக் கோரும் நிலையில், விண்ணப்பதாரர் அது குறித்த உண்மை விவரங்களை, தேர்வாணையத்திற்குத் தெரிவித்தல் வேண்டும்.**

4. நிலுவையிலுள்ள ஒழுங்கு நடவடிக்கைகள் / குற்றவியல் நடவடிக்கைகள், விண்ணப்பதாரரின் தெரிவுவாய்ப்புகளை பாதிக்குமா?

**நிலுவையிலுள்ள ஒழுங்கு நடவடிக்கைகள் / குற்றவியல் நடவடிக்கைகள், விண்ணப்பதாரரின் தெரிவுவாய்ப்புகளை (Selection prospects) எவ்வகையிலும் பாதிக்காது. எனினும்,**

**மேற்கண்ட தகவல்களை விண்ணப்பதாரர் தேர்வாணையத்திற்கு தெரிவிக்கத் தவறினால்,தேர்வாணையத்தால் விதிக்கப்படும் அபராதத்திற்கு உள்ளாவர்.**

## பிரிவு – V: தேர்வாணையத்துடனான தகவல் தொடர்பு முறை (Communication with the Commission)

1. தேர்வாணையம் தேர்வுக்கான அறிவிக்கையை வெளியிட்டுள்ளது என்பதை எப்படி தெரிந்து கொள்வது?

   **தேர்வாணையம் தேர்வுக்கான அறிவிக்கையை வெளியிட்டுள்ளது என்பதை தேர்வாணைய இணையதளத்திலும், செய்தித்தாள்களிலும் அவ்வப்போது பார்த்து அறிந்து கொள்ளலாம்.**

2. முதல் முறையாக தேர்வாணையம் நடத்தும் தேர்வுக்கு விண்ணப்பிக்க இருக்கிறேன், என்னென்ன தகவல்களை அறிந்திருக்க வேண்டும்?

   **தேர்வாணைய இணையதளத்தில் உள்ள “விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்” மற்றும் “விண்ணப்பதாரர்களால் அதிகம் கேட்கப்படும் கேள்விகள்” ஆகியவற்றைப் பயன்படுத்தி தேர்வு தொடர்பான தகவல்களைத் தெரிந்து கொள்ளலாம்.**

3. தேர்வாணையத்தின் அலுவலர்களை நேரில் சந்தித்து தகவல்கள் கோர முடியுமா?

   **நேரடிப் போட்டித் தேர்வு தொடர்பாக தேவையான அனைத்து தகவல்களையும் மின்னஞ்சல் மற்றும் கட்டணமில்லா தொலைபேசி**

**மூலமாகப் பெறலாம்.தொடர்புகொள்ள வேண்டிய மின்னஞ்சல் முகவரி மற்றும் கட்டணமில்லா தொலைபேசி எண்கள் ஆகியவை தேர்வாணைய இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.நிர்வாகக் காரணங்களினால் அலுவலர்களை நேரில் சந்தித்து தகவல்கள் கோர இயலாத நிலை உள்ளது.**

4. எந்தெந்த பதவிகளுக்கு எப்போது அறிவிக்கை வெளியாகும் என்பதை எப்படி தெரிந்து கொள்வது?

**ஒரு குறிப்பிட்ட ஆண்டில் நடத்தப்பெறும் அனைத்து நேரடிப் போட்டித் தேர்வுகள் தொடர்பாக காலிப்பணியிட எண்ணிக்கை, அறிவிக்கை வெளியாகும் மாதம், தேர்வு நடைபெறும் மாதம், இதர தெரிவுமுறை நடைபெறும் காலம் உள்ளிட்ட உத்தேச தகவல்கள் தேர்வாணையத்தால் வெளியிடப்படும் ஆண்டுத்திட்டத்தில் (Annual Planner) இடம்பெறும். ஆண்டுத்திட்டத்தில் இடம்பெறும் தகவல்கள் அனைத்தும் உத்தேசமானவை மற்றும் மாறுதலுக்குட்பட்டவை.**

5. தேர்வாணையத்தின் தேர்வுக்கான பாடத்திட்டம் என்ன? அதனை எவ்வாறு தெரிந்துகொள்ளவது?

**தேர்வாணையத்தால் நடத்தப்பெறும் அனைத்து நேரடிப்போட்டித் தேர்வுகளுக்கான பாடத்திட்டத்தை, தேர்வாணைய வலைதள முகப்புப்பக்கத்தில் உள்ள பின்வரும் இணைப்புகளை (Link) பயன்படுத்திப் பெறலாம். நியமனம் (Recruitment)>> பாடத்திட்டங்கள் (Syllabus)>> திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்டங்கள் (Revised Syllabus). மேலும், நேரடிப்போட்டித் தேர்வுகளுக்கான அறிவிக்கைகளில், அதற்குரிய பாடத்திட்டமானது வெளியிடப்படும்.**